அன்னங்களும் பட்சிகளும் நெய்யப்பட்ட ஒரு ரோஜா வண்ணப் புடவை

பாஸ்டனிலிருந்து ஐம்பது கிலோ மீட்டர் தூரத்திலிருந்த ஓர் இடத்தின் பள்ளியின் அரங்கில் இந்தியத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. பன்னிரெண்டு வயதுச் சிறுமி ஒருத்தி தட்டிக் கும்பிட்டு விட்டு "தீராத விளையாட்டு பிள்ளை"க்கு அபிநயம் பிடிக்க ஆரம்பித்திருந்தாள். அதற்குமுன் அவள் அன்னை "கிருஷ்ணா யூஸ்டு டு டீஸ் த கோபிஸ்" என்று ஆங்கிலத்தில் விளக்கியிருந்தாள். அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த சிறுமி அபிநயம் செய்யச் சிரமப்பட்டாள். கண்ணனின் புல்லாங்குழல் பலமுறை அவள் மூக்கின் எதிரே நீண்டது. பழத்தைக் கடித்துக் கொடுக்கும் சுகாதார மற்ற முறைகளைக் கையாண்ட கண்ணன் இன்னமும் அவளுக்குப் பிடிபடவில்லை. கண்ணன், குழல், கோபிகையர், எச்சில் பழம் என்ற எந்தப் பிம்பத்தின் துணையுமின்றி மேடையில் அல்லாடிக் கொண்டிருந்தாள் சிறுமி.

பள்ளி விடுமுறைகளில் மத்தியானமெல்லாம் ஆட்டம் பாட்டம் தான். சிறுமி சிறுவர் பட்டாளம் கூடி "முத்துக் கிருஷ்ணன் மோகன ரூபன் மோசம் செய்தாண்டீ" என்று பாடிக் கொண்டே ஆடுவார்கள். "குளிக்கும்போது திருட்டுத்தனமாய்ப் புடவையைத் திருடி, மரத்திலே கட்டி அவன் மறைந்திருந்தாண்டீ" என்ற வரிக்கெல்லாம் அனாயாச மாக மரத்தைக் காட்டி, ஒளியும் பாவனைகளெல்லாம் செய்தவர் களுக்கு, "ஆடையைத் தந்தான் அவன் மானத்தைக் காத்தான்" என்ற வரியில் மட்டும் பலத்த சந்தேகம். மானம் என்றால் என்ன என்பது பற்றி பெரிய சர்ச்சை. அவர்களைவிட வயதில் சற்றுப் பெரியவனான மூர்த்திதான் மானம் என்பது வானம் என்ற சொல்லின் திரிபு என்றும், அந்தச் சொல்லுக்கு அவர்கள் ஆகாயத்தைக் காட்ட வேண்டும் என்றும் உறுதியுடன் கூறினான். "ஆடையைத் தந்தான்" எனும்போது மார்பின் குறுக்கே கையைப் போட்டுப் புடவைத்

தலைப்பைக் காட்டுவது போல் செய்தவர்கள், அதன் பின் வந்த "மானத்தைக் காத்தான்" என்ற வரிக்கு இரண்டு கைகளையும் உயரே தூக்கி வானத்தைக் காட்டினார்கள். கண்ணன் கடவுள் இல்லையா? கடவுளர்கள் வானத்தில் இருப்பவர்கள்தானே? அதனால் அவன் வானத்தைக் காப்பது சரிதானே? இப்படிப்பட்ட நம்பிக்கை தோய்ந்த கேள்விகளுடன், வானம் மற்றும் கண்ணன் பிம்பங்கள் இணைந்தே வந்தன மனத்தில். புடவைத் தலைப்பைக் காட்டித் தோளில் உறுதியாகப் படிந்த கரங்கள் சிறிதும் சம்பந்தமில்லாத வானை நோக்கி, எந்த விதத் தர்க்க ரீதியான தொடர்பும் இல்லாமல் நீண்டது இந்தப் பிம்பங்களின் துணையுடன்தான். உடம்பு, பாடல், விளையாட்டு, வானம் எல்லாம் சுலபமாகப் பிணைந்துகொண்டன.

நியூயார்க் வழியாக பாஸ்டனில் வந்து இறங்கியதும் கீதா அஹுஜா இந்தியத் திருவிழா போவதுபற்றிக் கூறினாள்.

"இங்கிருந்தேயா? வீட்டுக்குப் போய் சாமானை இறக்கி விட்டு ..." என்று இவள் இழுத்தபோது, சாமான்களை மளமளவென்று வண்டியின் பின்னால் வைத்தபடி,

"உன் சொத்து என் வண்டியில் பத்திரமாக இருக்கும். வீடு என்ன வீடு? இப்படி வீட்டைப் பார்த்து ஓடிக்கொண்டே இரு. நாலு சுவர் இல்லாவிட்டால் உனக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமே? ஒரு இடத்தில் நீ நின்றவுடன் நாலு பக்கமும் சுவரெழுப்பிவிட வேண்டும் அனார்கலிக்குச் சமாதி கட்டியது போல ..." என்று பொரிந்து தள்ள ஆரம்பித்தாள்.

மௌனமாகக் காரில் நுழைந்து அவள் பக்கத்தில் அமர்ந்ததும், காரில் அமர்வதுபற்றி இன்னொரு சொற்பொழிவு நடக்குமோ என்று நினைத்தாள். காரின் கதவைத் திறந்து, இருக்கையில் அமர்ந்து சறுக்கிப் போகாமல் மாட்டு வண்டியில் ஏறுவதுபோல் ஏறுகிறாள் என்பது கீதாவின் குற்றச்சாட்டு. போனமுறை இவள் போனபோது கிடைத்த விமர்சனம். இத்தனை சொல்பவளுக்குக் கையால் தட்டிய சோள ரொட்டியும், கடுகுக் கீரை மசியலும்தான் சாப்பாட்டில் சேர்த்தி. முழங்கை அளவு டம்ளரில் நுரைக்க நுரைக்க லஸ்ஸி குடித்தால்தான் அவள் சாப்பாடு பூரணமடையும். இத்தாலியச் சாப்பாடோ, மெக்ஸிகன் உணவோ சாப்பிடப் போகும்போதுகூட, "ரொட்டி சாப்பிடும் நேரம்" என்றுதான் கூறுவாள். இதைச் சுட்டிக் காட்டினால், சிரித்துக் கொள்வாள்.

கீதாவின் வளர்ப்புப் பெண் பின்னிருக்கையில் குழந்தைகளுக்கான சிறு இருக்கையில் பத்திரமாக அமர்ந்திருந்தாள். நான்கு வயது. அலக்நந்தா என்று ஆற்றின் பெயரை வைத்திருந்தாள். "அவள் எந்தச் சேறும், சகதியும், பாசியும் சேர்க்காமல் ஓடிக்கொண்டே இருப்பவள். தொடக்கம், முடிவு இல்லாதவள்" என்பாள். இரவில் அவளை உறங்க வைக்கும்போது கீதாவுக்கு பஞ்சாபிப் பாடல்கள்தான் வந்தன. அலக்நந்தாவை டில்லியின் அனாதை ஆச்ரமத்திலிருந்து தேர்ந்தெடுத்து தன் மகளாக்கிக்கொண்டாள். கீதாவின் தாயைப் பெற்ற தில்ஜித்

கௌரின் தளர்ந்து போன தொடைகளின் மேல்தான் அலக்நந்தா வீட்டுக்கு வந்ததும் தூங்கினாளாம். அவள் மேல் தன் துப்பட்டாவைப் போட்டு, சுருக்கங்கள் ஏறிய தன் விரல்களால் அவள் தலையை நீவி விட்டாளாம் தில்ஜித் கௌர். "இப்போது இவள் என் நானியைப் போலவே சிலதைச் செய்கிறாள்" என்று வியந்துபோவாள்.

அலக்நந்தா அமெரிக்க ஆங்கிலம் பேசியது. கடந்த ஆண்டு கீதாவை விட்டு விலகிவிட்ட அவள் கணவனை பீட்டர் என்று பெயரிட்டு அழைத்தது. இந்தியத் திருவிழா போவது முக்கியமாக அவளுக்காகத்தான் என்றாள் கீதா. இந்தியக் குழந்தைகளைத் தத்து எடுத்த பலரும் வருவார்கள் என்றாள்.

"தீராத விளையாட்டுப் பிள்ளை"க்குப்பின் ஒரு பழைய ஹிந்தி பாடல். அதன் பின் ஒரு ஹிந்தி பாப் பாடல். பிறகு ஒரு குஜராத்தி கர்பா நடனம். கசோரி, சமோஸா, டோக்லா, இட்லி, வடை, தோசை, புளியஞ்சோறு என்று உணவுப் பொருட்களின் விற்பனை வெளியே இருந்த பந்தலில். ஜடைபில்லை வைத்த பின்னல்கள், குஞ்சலங்கள், கொண்டைகள், புடவை, தாவணி, பஞ்சாபி உடைகள்.

அவள் அமெரிக்கப் பயணம் கணினித் தொழிலின் உச்சங்களை எட்ட "தீராத விளையாட்டுப் பிள்ளை"யையா, இட்லியையா, சமோஸாவையா எதை மனம் தேடும் என்று தெரியவில்லை. சில விஷயங்கள் அவளுள் அமிழ்ந்துபோயிருந்தன. அவை கையால் தொடக்கூடியவை அல்ல. ஒலிகள், வாசங்கள், பிம்பங்கள், உணர்வுகள் என்று அவை மனத்தை வியாபித்தன. பெங்களூர் வீட்டின் பின்புற மிருந்த செண்பக மரத்தை நெருங்கும்போது ஒரு மயக்கும் மணம் வீசும். சைனீஸ் செண்பகம் என்று சுண்டுவிரலில் பாதி அளவு ஒரு வெண்மை நிறச் செண்பகப் பூ. கூந்தலில் சூடிக்கொண்டு உறங்கினால் தலையணை எல்லாம் அதன் மணம். பிறகு சக்கைப் பழத்தை இரண்டாகப் பிளந்ததும் வீசும் அந்த ஓர் இனிப்புக் கலந்த மணம். மாலியின் காபி ராக ஆலாபனையின் முடிச்சுகள், சிதறல்கள், உருளல்கள். அடியில் விறகு எரியும் வெந்நீர் தவலையின் மூடியைத் திறந்து, அதிலிருந்து வெந்நீரை எடுத்து பக்கெட்டில் விட பித்தளைச் செம்புடன் குனியும்போது முகத்தில் அடிக்கும் சூடான நீராவி. பாலசரஸ்வதி ஆடியபோது நெற்றியில் பூத்த வியர்வைத் துளிகள். பிர்ஜூ மஹாராஜின் கதக் நடனத் துள்ளல். கனத்த தோசைக் கல்லில் சரியாகப் புளித்த மாவை இட்டுப் பரப்பியவுடன் அது வேகும் மணம். மிளகாய்ப் பொடியில் கலந்த எள் மணம். வடிகட்டப்படாமல், செக்கிலிருந்து தருவிக்கப்பட்ட நல்லெண்ணெய்யின் மணம். பீம்ஸென் ஜோஷியின் லலித் ராகக் குழைவு. கங்குபாய் ஹங்கலின் ஓங்காரம். கிரிஜா தேவியின் இழையும் குரல். இமாலயப் பிரதேசத்தின் ஒரு சிறு கிராமத்தின் செஸ்ட்நட் மரத்தின் கீழே நின்றபடி அவளும் தோழனும் பரிமாறிக்கொண்ட முத்தங்கள். அவள் வீட்டைக் கடந்து சுடுகாடு நோக்கி நிதமும் போகும் உடல்களின் பயணம். தூரத்தே எரியும் சுடுகாட்டுத் தீ. திருமூலரை மிகவும் விரும்பிப் படித்த தமிழ்

வாத்தியாரின் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற சொல்லோசை. 'பெருமானே, இவர்கள் என்னைப் புரிந்துகொள்ள வில்லை. புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். இவர்களுக்கு வேறு உள்ளத்தைத் தா. அல்லது எனக்காவது வேறு மொழி' என்ற காலிப் கவிஞரின் இறைஞ்சல். இவற்றில் எந்த நொடியில் எதை மனம் தேடப்போகிறது? தேடுமா? அல்லது இந்தியத் திருவிழாக்களில் சமனமடைந்துவிடுமா?

திரளாகப் பலர் வந்தனர். இந்தியக் குழந்தைகளை தத்தெடுத்த அமெரிக்கர்கள். சிரிப்பும் குதூகலமுமாய் பூத்தபடி குழந்தைகள். அதிகம் பெண் குழந்தைகள். குப்பைத்தொட்டியிலும், தொட்டிலிலும் விடப்பட்ட பெண் சிசுக்களா என்று ஓர் எண்ணம் சரேலென்று படமெடுத்தது. அடிவயிற்றில் சுரீரென்றது. அலக்நந்தாவின் விரலைப் பிடித்து நடத்தியபடி கீதா எல்லோரிடமும் பேசினாள். கூடவே இவளையும் அறிமுகம்.

எதிரே இருந்த அமெரிக்க மாதுவின் கையில் ஒரு பெண் குழந்தை. ரேசல் என்று கூப்பிட்டாள். மும்பாயிலிருந்து வந்து ஒரு வாரம்கூட ஆகவில்லை என்றாள். ஆறு மாதக் குழந்தை. பட்டுக் கரிய மேனி. பொங்கிப்பொங்கிச் சிரித்தது. இவளைக் கண்டதும் கையை நீட்டித் தாவியது. திரும்பத் தாயிடம் போக மறுத்தது. மார்பில் புதைந்து கொண்டது. கக்கக்கக்க என்று வாய்விட்டுச் சிரித்தது. "குடியா" (பொம்மை) "ஸோனு" (தங்கம்) என்று ஹிந்தியில் கொஞ்சியதும் புருவத்தை உயர்த்தி வியப்புக் காட்டியது. சடக்கென்று தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டது. பால் பாட்டிலுடன் கூப்பிட்ட தாயிடம் போய் ஒரு கையால் இவள் கழுத்தையும் சேர்த்து இழுத்தது.

நிகழ்ச்சிகள் தொடர்ந்தவாறிருந்தன. இங்கு ரேசலின் கும்மாளம்.

நேரம் செல்லச்செல்ல நெஞ்சில் ஒரு கனம் ஏறத் தொடங்கியது. இன்னும் யாராலும் தத்தெடுக்கப்படாத அனாதையாய் தன்னை உணர்ந்தாள். உடன் கழிவிரக்கம். சோர்வு. திடீரென்று விமான வேகத்தில் மனத்தின் குறுக்காக "கருணாலய நிதியே தினமும் உன் சரணாம்புஜம் கதியே" என்ற பள்ளிப்பாடல் பள்ளிப்பருவத்தினர் குரலில் ஓடியது. அதன் ஊடே ஏ. எம். ராஜாவின் குரலில் "சிற்பி செதுக்காத பொற்சிலையே, என் சித்தத்தை நீ அறிவாயோ?" என்ற ஓர் ஒலி விம்மியது. அதன் மேலே எஸ். டி. பர்மனின் குரலில் பெங்காலி நாட்டுப்பாடல் வந்து மோதியது. பல இதமான ஸ்பரிசங் களின் உணர்வு ஏற்பட்டது. மீண்டும் ரேசல் இவளை அணைத்துக் கொண்டது. தாயிடம் போய் இவளை நோக்கி விம்மியது உதடு பிதுங்க.

பெட்டியில் அம்மாவின் புடவை ஒன்று இருந்தது. பனாரஸ் டிஷ்யூ புடவை. மென் ரோஜா வண்ணத்தில் ஊதாக் கரையிட்டது. சரிகைக் கொடிகள் உடல் முழுவதும். கனத்த தலைப்பில் அன்னங் களும், பட்சிகளும், கொடிகளும். கீதாவிடம் காரின் சாவியைக்

கேட்டு வாங்கிக்கொண்டாள். டிக்கியைத் திறந்து, மேலாக இருந்த பெட்டியைத் திறந்து, அடியில் இருந்த புடவையை எடுத்தாள். கைப்பையில் இருந்த மடக்குக் கத்தியால் ஒரு முனையைக் கீறி, தலைப்பைக் கிழித்தாள். மீண்டும் எல்லாவற்றையும் மூடி விட்டுத் திரும்பினாள். தலைப்புத் துண்டை மடித்துக் கையில் வைத்துக் கொண்டாள்.

அந்தப் புடவை அவள் தந்தை பனாரஸ் நகருக்கு ஒரு வேலையாகப் போனபோது அங்குள்ள நெசவாளர்களிடம் நெய்து வாங்கியது. கூட்டுக் குடும்பத்தின் புறுபுறுப்புக்களை மீறி அம்மாவுக்குத் தந்தது. அதை அவள் அணியாத நிகழ்ச்சி கிடையாது. சென்னையில் இருந்தபோது சம்பந்த முதலியார் நாடகம் பார்த்த புடவை அது. வாசவாம்பாளின் ஹார்மோனிய இசையை உறிஞ்சிய புடவை. ராஜரத்தினம் பிள்ளையின் தோடியின்போது விரிந்து கிடந்த புடவை. மீரா படம் பார்த்த புடவை. சுதந்திரம் பெற்ற தினம் கட்டிய புடவை. ரிஷிகேசமும், ஹரித்துவாரமும் போன புடவை. அம்மன்களின் குளிர்ச்சியையும், உக்கிரத்தையும் ஈர்த்துக்கொண்ட புடவை. கல்யாண காலங்களில் பூக்களை முகர்ந்த புடவை. மைசூர் சுற்றிப்பார்க்கப் போனபோது பிருந்தாவனத் தோட்டத்தையும், பிலோமினா மாதா கோவிலையும் பார்த்த புடவை. அம்மாவின் தோழிகள் பலரின் உடலைத் தழுவிய புடவை. குடும்பத்தில் முதல் முதலாகப் புடவை உடுத்திய பெண்கள் எல்லோரும் அணிந்த புடவை. மர பீரோவில் வேப்பிலை, மருக்கொழுந்து துணையுடன் படுத்துக் கிடந்த புடவை. அப்பா இறந்த பிறகு காரியங்கள் நடந்த தினத்தன்று எண்பது வயது அம்மா இதை உடுத்திக்கொண்டபோது துக்கத்தை வலிந்து பூசிக் கொண்ட முகங்கள் மாறின. பிடித்து வைக்கப்பட்ட குழந்தைகள் துள்ளியாடத் தொடங்கின. திரௌபதியின் முடியாத கூந்தலில் மகாபாரதமே புதைந்து கிடந்ததுபோல் இந்தப் புடவையும் சரித்திரத்தை உள்ளடக்கியது. இதன் பட்டிழைகளில் கங்கை வெள்ளத்தின் தொடல் இருந்தது. மலைகளின் மாருதம் இருந்தது. சூரியனின் தகிப்பும், நிலவின் குளிர்ச்சியும் இருந்தது.

உள்ளே போனபோது ரேசல் அதன் தாயின் கையில் உறங்கி விட்டிருந்தது. தன் முகவரி அட்டையைத் தாயிடம் தந்து புடவைத் துண்டை ரேசல் மேல் போர்த்தினாள். உறக்கத்திலும் உடலை இருபுறமும் மென்மையாக அசைத்து புடவைக்குள் சௌகரியமாக முடங்கிக்கொண்டது ரேசல். ஒரு கையால் புடவையின் கரையைப் பற்றிக்கொண்டது.

அந்தப் புடவையின் பட்டு இழைகள் அவள் மென்உடலில் படட்டும். அதை உராயட்டும். அதன் அன்னங்களும், பட்சிகளும், கொடிகளும் அவள் மேல் படரட்டும். அவளை இருத்தட்டும்.

'உயிர்நிழல்', மே - ஜூன் 1997